பக்கங்கள் 13+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 26 வெள்ளிக்கிழமை 09.05.2025 | அதிர்வு 279

## மஹிந்த தலைமையில் மொட்டுவின் கூட்டம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் கட்சிக் கூட்டம் இன்று மாலை நடைபெறுகின்றது. ▶04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





### மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் வீழ்ந்து

# ஹெலிக்கொப்டர் விபத்து! 6 படையினர் உயிரிழப்பு!!

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பெல் 212 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 படையினர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.


ஹிங்குராக்கொட விமானப்படை தளத்திலிருந்து புறப்பட்ட ஹெலிக்கொப்டர், மாதுரு ஓயா இராணுவ விசேட படைத்தளத்தில் இருந்து விசேட படைப்பிரிவின் பயிற்சி நிறைவு அணி வகுப்பில் ஒரு விளக்கப் பயிற்சியைக் காண்பிக்க விசேட படையினருடன் பயணித்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. ▶04

## மீண்டும் கூட்டமைப்பாகச் செயற்பட காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குத் தமிழரசுக் கட்சி அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது என்று அந்தக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். 03▶





# பங்களாதேஷ் பிரஜைகள் 34 பேர் இலங்கையில் கைது

(எஸ்.ஜினோதன்)

விசா காலாவதியாகி இலங்கையில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 34 பங்களாதேஷ் பிரஜைகள் நேற்று வியாழக்கிழமை சீதுவை பகுதியில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்த போது குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த பல புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இவர்கள் 19 முதல் 54 வயதுக்குட்பட்ட ஆண்களாவர்.

கைது செய்யப்பட்டவர்கள் வெலிசறை குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பங்களாதேஷ் பிரஜைகளை விரைவில் அவர்களது நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுத்து வருவதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத்-துறையினர் தெரிவித்துள்ளனர்.



# போதைப்பொருள்களுடன் நேற்று 405 பேர் சிக்கினர்!

நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப்பொருள்களுடன் 405 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, 99 பேர் ஹெரோயின் போதைப்பொருளுடன், 221 பேர் ஐஸ் போதைப்பொருளுடன், 85 பேர் கஞ்சா போதைப்பொருளுடன் பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் நீரில் மூழ்கி பரிதாபப் பலி!



யாழ்ப்பாணத்தைவம்ச சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை ஹெப்பற்றிக்கொல்லவே பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த பாலேந்திரன் முகுந்தன் (வயது 29) எனும் பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# துன்னாலை பகுதியைச் சேர்ந்த 3 வயது பாலகன் திடீர் மரணம்!

திடீர் சுகவீனம் காரணமாக மூன்று வயது பாலகன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

யாழ். வடமராட்சி, துன்னாலை பகுதியைச் சேர்ந்த வி.சுயாந் என்ற பாலகனே உயிரிழந்துள்ளார்.

மேற்படி பாலகன் கடந்த மாதம் 28ஆம் திகதி வயிற்றோட்டம் காரணமாக சிகிச்சை பெற்ற நிலையில் இந்த மாதம் 4ஆம் திகதி வயிற்று வலி ஏற்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்புக்கான கரணம் தெரியாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மீண்டும் கூட்டமைப்பாக...**

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையான சபைகளைக் கைப்பற்றி ஆளும் வகையில் முதல் நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி இருக்கின்றது.

அவ்வாறு எமக்கு வாக்களித்து எம்மை அங்கீகரித்து ஏற்றுக்கொண்ட – ஊக்கமளித்த தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற அனைவருக்கும் வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் எல்லோருக்கும் கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மீண்டெழுவதற்கான வாய்ப்பைத் தந்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

மிகக் கேவலமாக தேர்தல் காலத்தில் எங்களை எதிர்த்துப் போட்டியிட்டு இல்லாதவற்றைச் சொல்லி தங்களின் மகிழ்ச்சியைக் கொண்டாடியவர்கள் இப்போது நாங்கள் தேசிய மக்கள் கட்சியோடு டீல் பேசுகின்றோம் என்று பொறுப்புள்ளவர்களே குறிப்பிட்டுப் பேசுகின்றார்கள்.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் என்ற முறையில் பொறுப்போடு இதனை மறுதலிக்கின்றேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து ஆட்சி அமைப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எந்த டீலையும் செய்யவில்லை. இந்தப் பரப்புரைகள் வேலை செய்யாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பிரமுகர் நளிந்த ஜயதிஸ்ஸ கூட தம்மைத் தமிழ்க் கட்சிகள் அணுகவில்லை என்பதைக் கூறியிருக்கின்றார்.

அடுத்த கட்ட செயற்பாடுகளை ஆராய்வதற்காக நாளை சனிக்கிழமை அரசியல் குழு கூடுகின்றது. எந்தெந்தச் சபைகளில் எவ்வாறு செயற்படுவது?, யார் யாரை முன்னிலைப்படுத்தி தவிசாளர், மேயரைத் தீர்மானிப்பது? பற்றிக் கலந்துரையாடவுள்ளோம்

ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் எங்கள் கட்சியின் பதில் பொதுச்செயலாளருடன் பேசியுள்ளார்கள். ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம்." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ஹெலிகொப்டர்...

இந்த விபத்தின்போது ஹெலிக்கொப்டரில் இருந்த 2 விமானிகள் உட்பட 12 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அரலகங்வில அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக பொலனறுவை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இரண்டு வான்வழி துப்பாக்கி வீரர்கள் மற்றும் நான்கு இராணுவ விசேட படை வீரர்கள் உட்பட 6 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இந்த விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு விமானப்படைத் தளபதி தலைமையிலான 9 பேர் கொண்ட விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்த...

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அவரது கொழும்பு விஜேராம இல்லத்தில் இந்தக் கூட்டம் நடைபெறுகின்றது.

இந்தக் கூட்டத்திற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.







# நல்லை ஆதீன குரு முதல்வரின் நினைவுப் பிரார்த்தனை

நல்லை ஆதீன குரு முதல்வரின் நினைவுப் பிரார்த்தனை வைபவமும் அஸ்தி பிரதிஷ்டை நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

ஸ்நபன அபிஷேகம் முத்தமிழ்க் குருமணி நா.சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

சித்தாந்த பண்டிதர் கு.ஜெகதீஸ் வரக்குருக்கள் பூஜை வழிபாடுகளை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வரின் அஸ்தி பிரதிஷ்டை நிகழ்வு கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# 'டீல்' அரசியல்!

"வடக்கு, கிழக்கில் இணைந்து சபைகளை நிறுவுவது குறித்து தமிழ்க் கட்சிகள் உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலையும் அரசுக்கு வழங்கவில்லை. அதிகபட்ச சபைகளை நிறுவுவதே அரசின் எதிர்பார்ப்பாகும். தமிழ்க் கட்சிகள் எம்முடன் பேச்சு நடத்தினால் ஆழமாக ஆராய்ந்த பின்னரே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும்."

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கின்றார்.

செய்தியாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அரசுப் பேச்சாளர் அப்படிப் பதிலளித்திருப்பார் என்று கருதலாம்.

ஏனென்றால் தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஆட்சி அமைக்கக்கூடிய எண்ணிக்கை அளவுக்கு உறுப்பினர்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் எவையும் ஆளும் தேசிய மக்கள் சக்தியோடு கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கும் எண்ணத்திலோ, சகவாசம் வைக்கும் திட்டத்திலோ இல்லை.

தேசிய மக்கள் சக்தியை பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கத் தரப்பாக வெளிப்படுத்திப் பிரகடனம் செய்து, அதைத் தங்கள் பிரதான தேர்தல் பிரசாரக் கோஷமாக முன் வைத்துத்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த முறை தேர்தலை எதிர்கொண்டன. அந்தக் கோஷத்தின் அடிப்படையிலேயே தான் அதிக ஆசனங்களை அவை பெற்றுக் கொண்டன.

இந்தப் பின்புலத்தில் ஏதேனும் ஒரு சபையில் தன்னும் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவை ஏதேனும் தமிழ்த் தேசியக் கட்சி தேடிப் பெற்றுக் கொள்ளுமாயின் அது இன்றைய நிலையில் அந்தக் கட்சிக்கு அரசியல் தற்கொலைக்கு - அஸ்ரத மனத்துக்கு - ஒப்பானதாகும்.

இதைத்தான் "தமிழர் தாயகத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் 'டீல்' பேசி ஆட்சி அமைப்பவர்கள் தமிழினத் துரோகிகள்" என்று தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தரும் யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் மேயருமான சட்டத்தரணி மணிவண்ணன் நேற்று தெரிவித்திருக்கிறார்.

இதே போல அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் வேட்பாளராகக் கடந்த தடவை யாழ் மாநகர சபைக்கு போட்டியிட்டபோது அப்படித்தான் ஈ.பி.டி.பி. கட்சியைத் தீண்டதகாத சக்தியாக அவரும் சேர்ந்து விமர்சித்தார். ஆயினும் பின்னர் அந்தத் தரப்போடு 'டீல்' பேசித்தான் - அதன் மூலம்தான் - யாழ். மாநகர முதல்வரானார். ஆகையினால் அவருக்கு இந்த டீல் அரசியல் பற்றி நேரத்துடனேயே எதிர்வு கூறக் கூடிய திறமை இருக்கின்றதோ என்னவோ...!

அதுவல்ல விடயம். இங்கு தமிழ் தேசியக் கட்சிகள் எவையும் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவை தேடி, நாடி போகப் போவதில்லை. ஆனால் தமிழர் தாயகத்தில் ஒவ்வொரு சபையிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அதிகாரத்தைப் பிடிப்பதற்குத் தமக்குள் நடத்தப் போகின்ற சிண்டையைப் பிய்க்கும் சண்டையில், எந்தத் தரப்பும் ஆதரவு கோரி வராவிட்டாலும் மூன்றாம் தரப்பாக தேசிய மக்கள் சக்தி தன்பாட்டில் புகுந்து விளையாடக் கூடிய வாய்ப்புகள் உண்டு. அது தவிர்க்க முடியாதது தான். அது வரும் வாரத்தில் கட்டவிழும்போது சுவாரசியமாக நோக்கலாம்.

இப்படி தேசிய மக்கள் சக்தி மூன்றாவது தரப்பாகத் தானாகத் தலையிடும் போது, அதன் ஆதரவை பெறாத கட்சி, தேசிய மக்கள் சக்தி ஆதரித்து வாக்களித்த தரப்பை 'துரோகிகள்' என்றோ, 'டீல்' அரசியல்வாதிகள் என்றோ பகிரங்கமாக விமர்சிக்கும் நிகழ்வுகளும் அரங்கேறும். பொறுத்திருந்து பார்க்கலாம்.



# நாட்டில் அதிகரிக்கும் பாலியல் வன்கொடுமை; எதிராக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## நாடாளுமன்றில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

நாட்டில் அதிகரிக்கும் பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயத்தை இன்று (09) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை இலக்கு வைத்து நடத்தப்படும் பாலியல் வன்கொடுமைகள் மற்றும் பிற தவறான செயல்கள் குறித்து ஊடகங்களில் ஒவ்வொரு நாளும் பல்வேறு செய்திகளைப் பார்க்கிறோம்.

சமீபத்திய சம்பவங்களாக அநுராதபுரத்தில் பெண் மருத்துவர் ஒருவர் தகாதமுறைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தையும், கொட்டாஞ்சேனை பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான சம்பவத்தையும் குறிப்பிடலாம்.

இதற்கு மேலதிகமாக நாளாந்த பத்திரிகைகளை வாசிக்கும் போது வேறு பல சம்பவங்களையும் காணலாம்.

இது போன்ற சம்பவங்கள் நிகழும் போது, சம்பிரதாய முறைகளைப் பின்பற்றி நடந்து கொள்வதற்குப் பதிலாக உடனடியாக செயற்பட்டு தகாத முறைக்கு உட்படுத்தப்பட்ட அல்லது பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யத் தேவையான பொறிமுறையை ஸ்தாபிக்க வேண்டும்.

பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பும் கடமையுமாகும்.

இந்தக் கடமையை நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது கொள்கை வகுப்பாளர்களாகிய நமது பொறுப்பாகும்.– என்றார்.





# வெசாக் பண்டிகையை முன்னிட்டு யாழ்.- கொழும்பு விசேட ரயில்!

வெசாக் பண்டிகையை முன்னிட்டு விசேட ரயில் சேவையை முன்னெடுப்பதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த ரயில் சேவை இன்று (09) முதல் முன்னெடுக்கப்படும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அந்தவகையில், கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலும் இந்த விசேட ரயில் சேவை இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட வார விடுமுறை மற்றும் அரசு வெசாக் பண்டிகையை முன்னிட்டு இன்று (09) முதல் பல விசேட ரயில் சேவைகள் நடத்தப்படும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பு கோட்டைக்கும் பதுளைக்கும் இடையிலும் இந்த ரயில் சேவை நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதன்படி, இந்த விசேட ரயில் சேவைகள் இன்று முதல் 13 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# வெசாக் தினத்தை முன்னிட்டு மதுபானசாலைகள் மூடல்!

வெசாக் தினத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் உதய குமார பெரேரா அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், அமைச்சரவையின் தீர்மானத்துக்கு இணங்க, எதிர்வரும் 12 ஆம் திகதி வரும் வெசாக் பௌர்ணமி போயா தினத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்படும் தேசிய வெசாக் விழாவை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 11 ஆம் திகதி இரவு மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படும். பின்னர் 15 ஆம் திகதி திறக்கப்படும். இந்தக் காலப் பகுதியில் நாட்டிலுள்ள அனைத்து உரிமம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்பட வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் மது, போதைப்பொருள் மற்றும் புகையிலை தொடர்புடைய குற்றங்களைத் தடுப்பதற்கான சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதற்கு இது உதவியாக அமையும்.

இதற்காக, 1913 என்ற இலக்கத்தினூடாகவும் 0112-877688 என்ற தொலைநகல் மூலமாகவும் நாடு முழுவதும் அமைந்துள்ள கலால் அலுவலகங்கள் மற்றும் விசேட கண்காணிப்புப் பிரிவுகளுக்கு தொடர்ந்தும் முறைப்பாடுகளை வழங்க முடியும்.- என்றுள்ளது.

# வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையை வினைத்திறனாக்க நடவடிக்கை அவசியம்!

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன் )

வடமாகாணத்தில் சுற்றுலாத் துறையை வினைத்திறனாக இயங்கச் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.



வடக்கில் ஒவ்வொரு மாவட்டச் செயலகங்களிலும் பிரத்தியேகமாக சுற்றுலா அலகுகளை நிறுவ நடவடிக்கை எடுப்பதுடன் அதற்கு உரிய ஆளணி வளங்களையும் வழங்கி வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையை விரைந்து மேம்படுத்துமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது அரசுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது சுற்றுலாத் துறை மூலம் கிடைக்கும் வருமானத்திலேயும் இலங்கை முழுவதும் தங்கியுள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டுக்கு வருகை தருகின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்துக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் பலாலி சர்வதேச விமான நிலையம் மற்றும், நாகப்பட்டினம் படகு சேவை ஊடாக வருகை தருகின்றனர்.

சுற்றுலா சார்பான விடயங்கள் முனைப்புப் பெற்றிருக்கும் நிலையில் இவை சார்பாக அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் நிர்வாகரீதியாக மாவட்டச் செயலகங்களில் பிரத்தியேகமாக சுற்றுலா அலுவலகங்கள் இல்லை. மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சுற்றுலா அபிவிருத்திக்கான உத்தியோகத்தர்கள் இல்லை.

சுற்றுலாசார் அபிவிருத்திச் செயற்பாடுகள், அலுவலகர்களால் மேலதிக நிர்வாகக் கடமையாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இதேநிலைமை மாகாண சபைகளில் குறிப்பாக உள்ளூராட்சி சபைகளிலும் காணப்படுகின்றன.

எமது வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களும், மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பகுதிகளும் தனித்துவமான இயற்கை மற்றும், கலாசார வளங்களைக் கொண்டுள்ளன. மேலும் மரபுரிமை மையங்கள், பாரம்பரிய உணவுகள், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் போன்றவற்றைச் சந்தைப்படுத்துவதற்குச் சுற்றுலாத் துறைக்குப் பலமான நிர்வாக அலுவலகமும் ஆளணியும் தேவை.

இதற்கெனப் புதிய அலுவலர்கள் உள்வாங்கப்படவேண்டும். அவ்வாறு உள்வாங்கப்படும் புதிய அலுவலர்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் பயன்படுத்தக் கூடிய வகையில் எமது மாகாணத்தில் உள்ள மாவட்டச் செயலகங்களில் சுற்றுலா அலகுகளை உடனடியாக நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்தோடு இவ்வாறு மாவட்ட செயலகங்களில் நிறுவப்படும் சுற்றுலா அலகுகளுக்குப் பிரதேச செயலகங்களிலும் பொருத்தமான அபிவிருத்தி உத்தியோகத்தரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதன்மூலம் வடக்கு மாகாணத்தில் வினைத்திறனான முறையில் சுற்றுலாத் துறையைச் செயற்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

# முனைவர் பால சிவகடாட்சத்தின் நூல் அறிமுகம் கொழும்பில்





எமுநா மற்றும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முனைவர் பால சிவகடாட்சத்தின் 'யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம்' என்ற நூலின் அறிமுக நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு மருத்துவர் விக்னவேணி செல்வநாதன் தலைமை வகித்திருந்தார்.

நிகழ்வில் சமூக ஆய்வாளரான கந்தையா சண்முகலிங்கம் உரையாற்றுகையில்,

பால.சிவகடாட்சம் ஏட்டுப்பிரதியில் இருந்த 'இரசவர்க்கம்' எனும் நூல் பிரதியை அச்சில் பதிப்பித்துள்ளார். இந்த நூல் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்ததாகும். செகராசசேகரன் என்ற பெயருடைய மன்னனால் இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட சமஸ்கிருத மொழியில் பாண்டித்தியம் உடைய அறிஞர்களால் ஆக்குவிக்கப்பட்டது.

செகராஜசேகரத்தின் ஒருசில பகுதிகளே கிடைத்துள்ளன. அழிந்து போனதாகக் கருதப்பட்ட 'இரசவர்க்கம்' எனும் பகுதியின் ஏட்டுப் பிரதியொன்றை இந்நூலாசிரியரின் குடும்பத்தினர் பாதுகாத்து வைத்திருந்தனர். அப்பிரதி அதிர்ஷ்டவசமாக அறிஞர் பால சிவகடாட்சத்தின் கையில் கிடைக்கப்பெற்றது. இந்த ஏட்டுப்பிரதியை வாசித்து அதனை அச்சு நூல் வடிவமாக்கியுள்ளார். இந்த நூல் காலத்தின் கட்டாயத் தேவை.– எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வில் அறிவார்ந்த நபர்கள், கல்வி ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

'யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம்' நூலானது எளிமையான வடிவில் பாரம்பரிய மூலிகைகள் தொடர்பில் ஏட்டுச்சுவடியில் இருந்த விடயங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

இந்நூல், உடலுக்கு ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கும் மருந்துப் பொருள்களின் குணங்களை எடுத்துரைக்கும் வெண்பாக்களால் ஆனது.



# மனைவி பணம் கொடுக்காததால் குடும்பஸ்த்தர் ஒருவர் தவறான முடிவு

போதைப்பொருள் பாவிப்பதற்கு மனைவி பணம் கொடுக்காததால் இளம் குடும்பஸ்த்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

அராலி – வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் வசந்தகுமார் (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

இந்த நபர் நேற்றுக் காலை மனைவியிடம் பணம் கேட்டுள்ளார். அதற்கு மனைவி, தன்னிடம் பணம் இல்லை என கூறியுள்ளார்.

இதனால் மன விரக்தியடைந்த குடும்பஸ்தர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# புதிய பாப்பரசர் தெரிவை அடுத்து மன்னார் ஆலய மணிகள் ஒலித்தன

(வாஸ் கூஞ்ஞ)

கத்தோலிக்க திருச்சபையின் 267 ஆவது புதிய திருத்தந்தை தெரிவு செய்யப்பட்டு விட்டார் என்று தெரிவிக்கப்பட்டதும் உலகத் திருச்சபையுடன் மன்னார் மறைமாவட்டமும் மகிழ்ச்சி கொண்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை (08) இரவு புதிய திருத்தந்தையின் தெரிவு வெளியிடப்பட்டதும், மன்னார் மறைமாவட்டத்தில் தேவாலயங்களில் இன்று வெள்ளிக்கிழமை (09) காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் ஆலயங்களில் மணிகள் ஒலிக்கப்பட்டன.



திருத்தந்தைக்கான ஆசீர் வேண்டி ஆலயத்துக்குள் மக்கள் பாடல்களும் இசைத்தனர்.

கத்தோலிக்க திருச்சபையின் 266ஆவது திருத்தந்தை பிரான்சீஸ் அண்மையில் உயிரிழந்ததைத் தொடர்ந்து 267 ஆவது புதிய திருத் தந்தை யார் என்ற எதிர்பார்ப்பில் உலகம் பூராகவும் குறிப்பாக கத்தோலிக்க இறைமக்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் இருந்தனர்.

இந்த நிலையிலேயே கத்தோலிக்க திருஅவையின் 267 ஆவது திருத் தந்தையாக கருதினால் றொபேட் பிரான்சிஸ் பிரீவோஸ்டைட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தனது பெயரை 14 ஆவது சிங்கராயர் பாப்பரசர் என சூட்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# அருகம்பை கடற்கரை பகுதியை அழகுபடுத்தினர் இராணுவத்தினர்

(பாறுக் ஷிஹான்)

ஆசியாவின் நான்காவது பெரிய கடல் பாறை அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் அருகம்பை பகுதியில் அமைந்துள்ளது நீர் சறுக்கல் உள்ளிட்ட விளையாட்டுக்கு நல்ல சூழல் இருப்பதால், வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அறுகம்பை விரிகுடா சுற்றுலாப் பகுதியை விரும்புகிறார்கள்.

அடுத்த வாரத்துக்குள் அருகபை விரிகுடா சுற்றுலா மண்டலம் திறக்கப் படவுள்ள நிலையில் அருகம்பை விரிகுடாவில் கடற்கரை சுத்தம் செய்யும் திட்டம் இன்று ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் 24 ஆவது பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சமிந்த கலப்பத்தியின் வழிநடத்தில் இராணுவ வீரர்கள் அருகம்பை விரிகுடாவில் ஒரு நாள் சுத்தம் செய்யும் பணியை மேற் கொண்டனர்.

இதற்காக சுமார் 200 இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர். அதே நேரத்தில் அறுகம்பை சுற்றுலா பொலிஸ் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொத்துவில் பிரதேச சபை அதிகாரிகள் இந்தச் சுத்தம் செய்யும் செயற்பாட்டில் இணைந்திருந்தனர். இது தவிர தற் போது இங்கு வருகை தரும் பல சுற் றுலாப் பயணிகளும் இந்த நிகழ்வில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.

24 ஆவது படைப்பிரிவின் துணைத் தளபதி பிரிகேடியர் பிரியங்க குலதிலக 242 வது படைப்பிரிவின் தளபதி கேணல் துஷார கேலே கோரலே 14 ஆவது லயன்ஸ் படைப்பிரிவின் கட் டளை அதிகாரி மேஜர் சுரேஷ் பெரேரா மற்றும் 24 ஆவது படைப் பிரிவின் சிவில் தொடர்பு அதிகாரி கேணல் சிசிர குமார ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.







# பாகிஸ்தானின் வான்வழித் தாக்குதல் முயற்சிகளை முறியடித்தது இந்தியா

இந்தியாவின் 15 நகரங்களை குறி வைத்து பாகிஸ்தான் மேற்கொண்ட வான்வழித் தாக்குதல் முயற்சிகளை இந்தியா முறியடித்ததன் தொடர்ச்சியாக, நேற்று இரவும் பாகிஸ்தானின் ஏவு கணைகளையும், ட்ரோன்களையும் இந்திய பாதுகாப்புப் படை வெற்றி கரமாக வீழ்த்தியுள்ளது.

ஜம்மு விமான நிலையம், பஞ்சாபின் பதன்கோட் விமான நிலையம், ராஜஸ் தானின் நல், பலோடி, உத்தர்லை ஆகிய 3 இடங்களில் உள்ள விமானப்படை தளங்களை குறிவைத்து பாகிஸ்தான் ட்ரோன்கள் நேற்று இரவு திடீர் தாக்குதல் நடத்த முயற்சி செய்தன. இந்திய விமா னப் படை அனைத்து ட்ரோன்களையும் நடுவானில் சுட்டு வீழ்த்தியது.

ஜம்மு எல்லை பகுதியில் நேற்று இரவு அத்துமீறி பறந்த பாகிஸ்தான் விமானப் படையின் எப்-16 ரக போர் விமானத்தை இந்திய விமானப்படை சுட்டு வீழ்த்தியது. இதேபோல பாகிஸ் தான் விமானப் படையின் எப்.ஜே-17 ரகத்தை சேர்ந்த 2 போர் விமானங்களை யும் இந்திய விமானப்படை சுட்டு வீழ்த்தி யது. முன்னெச்சரிக்கையாக ஜம்மு மற்றும் பஞ்சாப், ராஜஸ்தான் எல்லை பகுதிகளில் மின் விநியோகம் நிறுத் தப்பட்டதால் அப்பகுதிகள் இருளில் மூழ்கின.

ஜம்மு - காஷ்மீரின் குப்வாரா, பார முல்லா மாவட்டங்களை ஒட்டி அமைந் துள்ள எல்லை கட்டுப்பாட்டு கோட்டுக்கு அருகே உள்ள எல்லையோர இந்திய பகுதிகளை குறிவைத்து நேற்று இரவு பாகிஸ்தான் ஏவிய 8 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை இந்திய இராணு வம் இடைமறித்து வீழ்த்தியதாக உறுதி யான தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, எல்லை கட்டுப்பாட்டு கோட டுக்கு அருகே பாகிஸ்தானின் 50 ட்ரோன் களை இந்திய இராணுவம் சுட்டு வீழ்த்தி யுள்ளது .

இது குறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட தகவலில்,

"ஜம்மு, பதன்கோட், உதம்பூரில் உள்ள இராணுவ நிலைகளை குறி வைத்து பாகிஸ்தான் ட்ரோன்கள் மற் றும் ஏவுகணைகளை கொண்டு தாக்கு தல் முயற்சியை நடத்தியது. எல்லைப் பகுதியில் இருந்து இந்த முயற்சி நடந்தது. அந்த முயற்சி, நிலையான செயல்பாட்டு நடைமுறைக்கு ஏற்ப முறியடிக்கப்பட்டது. இதில் உயிரிழப்பு களோ அல்லது பொருள் சேதமோ எதுவும் ஏற்படவில்லை. இந்தியா தனது இறையாண்மையைப் பாதுகாக்கவும், அதன் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தயார் நிலையில் உள்ளது." என்று தெரிவித்தது.

## 'ஒபரேஷன் சிந்தூர்' தாக்குதல்:

# முன்னெச்சரிக்கையாக சென்னையில் பொலிஸார் தீவிர கண்காணிப்பு

ஹஒபரேஷன் சிந்தூர்" தாக்குதலை ஒட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாக சென்னையில் பொதுமக்கள் அதி கம் கூடும் பகுதிகளில் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மாதம் காஷ்மீரின் பஹல் காம் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இச்சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந் திய இராணுவத்தினர் ஹஒபரேஷன் சிந்தூர்" என்னும் பெயரில் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகளின் 9 முகாம் கள் தகர்க்கப்பட்டன.

இதையடுத்து நாடு முழுவதும் 200 இடங்களில் போர் ஒத்திகை நடத்த திட்டமிடப்பட்டு, பல்வேறு பகுதிகளில் போர் ஒத்திகை நேற்று முன்தினம் நடை பெற்றது. இங்கு கல்பாக்கம் அணுமின் நிலையம், துறைமுகத்தில் போர் ஒத் திகை நிகழ்த்தப்பட்டது. இந்நிலை



யில், சென்னையின் முக்கிய பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக் கையாக பொலிஸார் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக அண்ணா சாலை, ஈவெரா பெரியார் சாலை, காம ராஜர் சாலை, வணிக வளாகங்கள், மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற் கரை, சென்ட்ரல் ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், முக்கிய கோயில்கள் உட்பட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பொலிஸார் கூடாரங்கள் அமைத்து தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் சந்தேக நபர்கள் நடமாட்டத் தையும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.



# சீனத் தயாரிப்பு விமானங்களைக் கொண்டு இந்திய விமானங்களை அழித்த பாகிஸ்தான்

இந்தியாவின் இரண்டு இராணுவ விமானங்களை, சீனத் தயாரிப்பு போர் விமானம் ஒன்றைக் கொண்டு பாகிஸ்தான் அழித்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அமெரிக்காவின் அதிகாரிகளை மேற்கோள் காட்டி, ரொய்ட்டர்ஸ் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு-காஷ்மீர் பிராந்தியத்தில் பயங்கரவாதிகளின் இலக்குகளை குறிவைத்து இந்தியா தாக்குதல் நடத்தி இருந்தது.

இதன்போது இந்தியாவின் இரண்டு போர் விமானங்களை சுட்டுவீழ்த்திய தாக பாகிஸ்தான் அறிவித்தது. அதில் ஃப்ரான்ஸ் தயாரிப்பான ரஃபேல் போர் விமானம் ஒன்றும் அடங்கும்.

இந்த விமானங்கள் இரண்டையும் சீனாவின் தயாரிப்பில் பாகிஸ்தான் கொள்வனவு செய்த போர் விமானம் ஒன்றைக் கொண்டே பாகிஸ்தான் வீழ்த் தியதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இது தொடர்பாக இந்தியா வின் விமானப்படை அதிகாரிகள் யாரும் பதில் வழங்கவில்லை என்றும் ரொய்ட் டர்ஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தியாவின் கட்டுப் பாட்டில் உள்ள ஜம்மு-காஷ்மீர் பிராந் தியம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய இடங் களில் பாகிஸ்தான் நேற்றிரவு வான் தாக்குதலை நடத்த முற்பட்டதாகவும், அந்தத் தாக்குதல்கள் முறியடிக்கப் பட்டதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# லாகூர் வான்பரப்பை மூடியது பாகிஸ்தான

வணிக விமானங்கள் பறப்பதை தடை செய்யும் வகையில் தங்களது வான்பரப்பை மூட பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் விமான நிலைய ஆணையம் கூறுகையில்,

“லாகூர் மற்றும் இஸ்லாமாபாத் விமான நிலையங்களில் உள்ள அனைத்து வணிக விமானங்க ளுக்கும் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கும் வகையில் வான்பரப்பு மூடப்பட்டுள்ளது. இருப்பினும் கராச்சி விமான நிலையம்



மட்டும் செயல்பாட்டில் இருக்கும்.” என்று தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங் கரவாத இலக்குகளை குறிவைத்து இந்திய இராணுவம் தாக்கியதைத் தொடர்ந்து அனைத்து விமானப் போக்கு வரத்துக்கும் கட்டுப்பாடு விதிக்கும் வகை யில் தங்களது வான்வெளியை 48 மணி நேரம் மூடுவதாக பாகிஸ்தான் அறிவித்தது.

மேலும், இந்தியாவின் பொறுப்பற்ற மற்றும் ஆத்திர மூட்டும் செயல்களால் சிவில் விமானப் போக்குவரத்துக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது குறித்து சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பிடம் பாகிஸ்தான் விமான நிலைய ஆணையம் ஏற்கெனவே புகார் தெரிவித்துள்ளது என்பது குறிப் பிடத்தக்கது.

# இந்தியா - பாக். விவகாரத்தில் நாங்கள் தலையிட மாட்டோம்

## அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் தெரிவிப்பு



இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடை யிலான விவகாரத்தில் அமெரிக்கா தலையிடாது எனவும் அது தங்கள் வேலையும் அல்ல என்றும் அந்நாட்டு துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் தெரிவித்துள்ளார்.

துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், இந்தியாவின் “ஒப ரேஷன் சிந்தூர்” இராணுவ நடவ டிக்கை மற்றும் பாகிஸ்தான் வான்வழி தாக்குதலை அடுத்து அவர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“போர் பதற்றத்தை தவிர்க்க வேண் டும் என நம்மால் அவர்களிடம் சொல்ல மட்டுமே முடியும். இந்தியா – பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான போர் பதற்றத் தில் நாம் தலையிட போவதில்லை. அது நம் பணியும் அல்ல. இந்தியா மற்றும் பாகிஸ்தான் வசம் ஆயுதங்கள் கீழே போட வேண்டும் என அமெரிக்கா சொல்ல முடியாது.

இந்த மோதல் பிராந்திய ரீதியிலான போராகவோ அல்லது அணு ஆயுத மோதலாகவோ மாறக்கூடாது என்பது நம் எதிர்பார்ப்பு. அப்படி நடந்தால் பேரழிவு ஏற்படும். இது அந்த நாடு களின் தலைவர்கள் வசம் உள்ளது.” என்று கூறியுள்ளார்.

பக்கங்கள் - 3

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 09/05/2025

## இரு வாகனங்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் பலி



C2 ▶



# அமெரிக்கா தொடுத்துள்ள பொருளதார போரால் கனடாவிற்கு ஏற்பட்டுள்ள பெரும் அச்சுறுத்தல்

## மத்திய வங்கியின் ஆளுநர் எச்சரிக்கை

அமெரிக்கா தொடுத்துள்ள பொருளதார போரினால் கனடாவிற்கு பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய மக்களினதும் நிறுவனங்களினதும் நிதிநிலைமைகள் 2025 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஆரோக்கியமான வளர்ச்சிக்குள் இருந்தன.

இருப்பினும், அமெரிக்கா தொடங்கிய வரித் தகராறு அந்த நிலையை அச்சுறுத்துவதாக வங்கிக் கானடா தெரிவித்துள்ளது.

வங்கியின் நிதி நிலைத்தன்மை அறிக்கையில் வெளியான தகவலின்படி, கடந்த C2 ▶

# ஒன்றாரியோவில் தட்டம்மை நோய் பரவுகிறது; டக் ஃபோர்ட் எச்சரிக்கை



ஒன்டாரியோ மாகாணத்தில் தட்டம்மை நோய் பரவலுக்கான முக்கியக் காரணம், சில சமூகங்கள் மத காரணங்களுக்காக குழந்தைகளுக்கு தடுப்பூசி போட மறுப்பது தான் என முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடவில்லை என்றால், இந்த வைரஸ் விரைவாக பரவத் தொடங்கும். எனவே அனைவரும், எல்லோரும் தடுப்பூசி போட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்டாரியோ மாகாணத்தில் தட்டம்மை வைரஸ் பரவல் திடீரென அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, தமது அரசு முழுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என குறிப்பிட்டுள்ளார்.

இந்த நோய்த் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முழு வீச்சில் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1.5 லட்சம் தடுப்பூசிகள் பொதுச் சுகாதார நிறுவனங்கள் வழியாக வழங்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் தடுப்பூசி போட ஊக்கப்படுத்த 20 லட்சம் டொலர்கள் விளம்பரத்திற்காக செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் வலியுறுத்துகையில், தடுப்பூசி செலுத்துவது எளிமையான, ஆனால் அவசியமான முடிவாக இருக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.



# யுகான் மாகாண முதல்வர் ரஞ்ச் பிள்ளை பதவியிலிருந்து விலகுகிறார் என அறிவிப்பு

கனடாவின், யுகான் மாகாண முதல்வர் ரஞ்ச் பிள்ளை பதவியிலிருந்து விலகுவதாகவும், மீண்டும் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை எனவும் அறிவித்துள்ளார்.

இந்த முடிவை எடுக்குமுன் அவர் தனது மகனுடன் யுகான் ஆற்றின் கரையில் முக்கிய உரையாடல் நடத்தினேன் என கூறியுள்ளார்.

எங்களைப் போன்றவர்கள் இந்த பணியை செய்யக்கூடியவர்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று என் மகன் என்னிடம் கூறினார் என பிள்ளை கூறியுளளார்.

ரஞ்ச் பிள்ளையின் தந்தை இந்தியாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. முதல்வர் பதவி என்பது தனது வாழ்நாளிலேயே மிகப் பெரிய பெருமை என ரஞ்ச் பிள்ளை குறிப்பிட்டார்.

டெம்ப்ஸ்டர் ஃபைபர் திட்டம் மூலம் தொலைதொடர்பு வசதியை மேம்படுத்தல், யுகான் பல்கலைக்கழகத்தை நிறுவுதல், மாற்றுத்திறனுள்ள மக்களுக்கு நீதியை மேம்படுத்தும் முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் மக்களுக்கு சேவைகளை வழங்க கிடைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் நடைபெறும் வரை, பிள்ளை தொழில்துறை வளர்ச்சி அமைச்சர் பதவியில் பணியாற்றத் தயார் என்று கூறியுள்ளார்.

அமெரிக்காவால் ஏற்பட்ட இறக்குமதி வரி பிரச்சனை, மருத்துவர்கள் மற்றும் தாதியர் நியமனம் ஆகியவை முக்கியமா தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

**அமெரிக்கா...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருடத்தை விட இந்த வருடத்தின் ஆரம்பத்தில் குடும்பங்களின் வருமானத்துடன் ஒப்பிடுகையில் கடன் வீழ்ச்சி காணப்பட்டது.

மேலும், நிறுவனங்களின் நிதி நிலைமைகளும் சாதகமான நிலையில் காணப்பட்டது.

நாட்டின் நிதி அமைப்பு கடந்த ஆண்டுகளில் பலவித அதிர்ச்சிகளை சந்தித்தாலும், அவை வெற்றிகரமாக எதிர்கொள்ளப்பட்டதாக மத்திய வங்கியின் ஆளுநர் ரிப் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

வட்டி விகிதங்களும் உறுதித்தன்மையை அதிகரித்திருந்ததாக வங்கியின் ஆளுநர் மேலும் தெரிவித்திருந்தார்.

இது எல்லாம் நடந்தபோது, அமெரிக்காவின் புதிய பாதுகாப்பு மனப்பாங்கில் செயல்படும் வரி கொள்கைகள், கனடாவை புதிய சிக்கல்களில் தள்ளி விட்டுள்ளதாக அவர் எச்சரித்துள்ளார்.

சர்வதேச வளர்ச்சிக்கு எதிராக செல்வது போல், அமெரிக்க வரி கொள்கைகள் முற்றிலும் தற்காப்பு போக்குடன் மாறிவிட்டன.

இது உலகளாவிய சந்தை வளர்ச்சியை சுருக்கி வருகிறது. ஒரு நீடிக்கும் வரி போர் கனடா பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய ஆபத்தை உருவாக்கு என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.




# இரு வாகனங்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் பலி

கனடாவின் ஸ்காப்ரோ பகுதியில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில், 20 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் பிரிச்மவுன்ட் வீதியும், சென் கிளயர் அவன்யூவில் உள்ள சந்திப்பில் ஏற்பட்டுள்ளது.

அந்த பெண் வீதியின் நடுப்பகுதியில் கடக்க முயன்றபோது, வடக்கே சென்ற வானும் தெற்கே வந்த வாகனமும் மோதிக் கொண்டன என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது காயமடைந்த பெண் உடனடியாக மீட்கப்பட்டு டொராண்டோ அவசர மருத்துவ உதவியாளர்களால் பல முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டன. எனினும் அந்தப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# எடோபிகோவில் மோட்டார்சைக்கிள் விபத்து; பெண் ஒருவர் படுகாயம்

டொரண்டோவின் எடோபிகோ பகுதியில் காரும், மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த புதன் கிழமை, கிப்லிங் அவென்யூ மற்றும் எக்லிங்டன் அவென்யூ மேற்கு சந்திப்பில் இடம்பெற்றதாக டொரண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.